# பெப்ரவரி - 25 - சனி

## புனித தாசியுஸ்

## முக மூடிகளை களைந்து குழந்தை உள்ளம் கொண்டவர்களாக வாழ்வோம்.

---

**முதல் வாசகம்: சீராக்கின் ஞானம் 17:1- 15**

கடவுள் மண்ணால் மனிதனை உண்டாக்கினார் தமது சாயலாக அவனைப் படைத்தார். திரும்பவும் அவனை மண்ணாகவே மாற்றுவார் அவனுக்குக் தக்க வலிமையைக் கொடுத்தார். நாட்களின் தொகையையும் காலத்தையும் அவனுக்குக் குறித்தார் நிலத்தில் உள்ளவைகளின் மீது அவனுக்கு அதிகாரம் கொடுத்தார். எல்லா உயிரினங்களும் அவனுக்கு அஞ்சும்படி செய்தார். அவனும் மிருகங்கள் மேலும் பறவைகள் மேலும் அதிகாரம் செலுத்தினான். அவர் அவனிடத்திலிருந்து அவனைப் போலவே அவனுக்கு ஒரு துணைவியை உண்டாக்கினார் அறிவையும் நாவையும் கண்களையும் காதுகளையும், நினைப்பதற்கு மனத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார் அறிவின் ஒளியால் அவர்களை நிரப்பினார். ஞான அறிவையும் அவர்களுக்குத் தந்தார் அவர்கள் இதயத்தை ஞானத்தினால் நிரப்பினார் நன்மையையும் தீமையையும் அவர்களுக்குக் காண்பித்தார். தம் செய்கைகளின் மாட்சியை அவர்களுக்குக் காண்பிக்க அவர்கள் இதயங்களின் மேல் தமது கண் வைத்தார். தம் புனித பெயரை அவர்கள் கொண்டாடவும், அவர்கள் தம் செய்கைகளின் மாட்சியை வெளிப்படுத்துவதனால் தம் அரும் பெரும் செயல்களில் மகிமைப் படுத்தப்படவும் திருவுளம் கொண்டார். அவர் அவர்களுக்கு நன்னெறியை ஏற்படுத்தி வாழ்நாளின் ஒழுங்குக்கு அவர்களை உரிமையாளராக்கினார். அவர்களோடு நித்திய ஒப்பந்தம் செய்துகொண்டார் தமது நீதியையும் தீர்மானங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவருடைய பெருமையின் மாட்சியை அவர்கள் கண்கள் கண்டன. அவர் குரலின் மேன்மையை அவர்கள் செவிகள் கேட்டன. மேலும் அவர்: எல்லா அக்கிரமத்திலிருந்தும் விலகுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அயலாரைப் பற்றிய கட்டளைகளை ஏற்படுத்தினார். அவர்கள் நடத்தைகள் எப்போதும் அவர் முன்பாக இருக்கின்றன் அவருடைய கண்களுக்கு அவை மறைந்தவை அல்ல. அவர் ஒவ்வொரு நாட்டுக்கும் தலைவரை ஏற்படுத்தினார். கடவுளுடைய மக்களோ இஸ்ராயேல் என்பது வெளிப்படுத்தப்பட்டது.

**பதில்பாடல்:** ஆண்டவருக்கு அஞ்சுவோர் மீது அவரது பேரன்பு நிலைத்திருக்கும்

**நற்செய்தி: மாற்கு 10: 13 - 16**

அக்காலத்தில் குழந்தைகளை இயேசு தொட வேண்டும் என்று அவரிடம் கொண்டுவந்தனர். சீடர் அதட்டினர். இயேசு அதைக் கண்டு சினந்து, அவர்களை நோக்கி "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்க வேண்டாம். ஏனெனில், கடவுளின் அரசு இத்தகையோரதே. உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசைக் குழந்தைபோல் ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது" என்றார். பின்பு அவர் அவர்களை அரவணைத்து, கைகளை அவர்கள்மேல் வைத்து ஆசீர்வதித்தார்.

**தியானம்:** ஒரு மனிதனின் தகுதியை நிர்ணயம் செய்வது எது? படிப்பா, பண்பா, பணமா, நாம் வாழும் சமுதாயத்தில் பதவி இருந்தால் பணம் இருக்கும், பதவியும் பணமும் இருந்தால் அதிகாரம் இருக்கும் என்று மாறி நீண்ட நாட்களாகிவிட்டன. பதவிகள் மனிதர்களை பிரித்து போட்டு விட்டன. எந்த துறையில் பார்த்தாலும் அதிகாரிகளும் பணியாளர்களும் இருக்கிறார்களே தவிர மனிதர்களை காணோம். மேலே இருப்பவர்கள் தனக்கு கீழ் இருப்பவர்களைத் துன்புறுத்துவதும் அவமானப்படுத்துவதும் சாதாரணமாக நடக்கிறது. இத்தகைய மனநிலையில் வாழும் நமக்கு இன்றைய நற்செய்தி ஒரு சவுக்கடியாக இருக்கிறது. சிறு குழந்தைகளின் பண்புகள், உணர்வுகளுக்கு முக மூடிபோட்டு மறைக்காமல் அவற்றை வெளிப்படுத்துவது இந்த சிறுபிள்ளைகளின் மனநிலை கொண்டு வாழ்ந்தால் இறையாட்சியில் நுழையமுடியும் என்கிறார் இயேசு. நாம் வாழும் இந்த நவீனகாலத்தில் மனிதர்கள் தங்கள் உணர்வுகளை அமுக்கி வைத்து விட்டு அவற்றிற்கு முக மூடு போட்டு அதுதான் நாகரீகம் என்று அழைப்பதை பார்க்கிறோம். இந்த உலகில் யாருக்குத்தான் கவலை இல்லை. மனம் ஒன்று இருக்கும் வரை ஏமாற்றம், வருத்தம், கவலை, இருக்கத்தான் செய்யும் . சரியாக பார்க்க தெரிந்து கொண்டால் தடைகள் கூட வழியாகிவிடும் . பார்வை சரியில்லை என்றால் பாதைகள் கூட புதர்களாகிபோகும். எனவே குழந்தை உள்ளம் கொண்டவர்களாக, வெளிப்படைவான மனிதர்களாக, திறந்தமனம் கொண்டவர்களாக நமது முகமூடிகளை எறிவோம் . குழந்தைகளைப் போல இயல்பாய் நாம் நாமாகவே வாழ்வோம்.